## சூளகிரி ஊராட்சி ஒன்றியம் பேரண்டப்பள்ளி ஊராட்சி தனி அலுவலர்/வ.வ.அ(கி.ஊ) நடவடிக்கைகள் (33)

முன்னிலை: இரா. இராமசந்திரன்

**பதிவேடு வரைபட அனுமதி எண்: 23/ 2019/ நாள்: 17.09.2019**

பொருள்: நீல வரைபட அனுமதி - பேரண்டப்பள்ளி ஊராட்சி - 73, மோரணப்பள்ளி வருவாய் கிராம சர்வே எண்: **389/2D1A , 389/25** -ல் திரு. A. இலட்சுமணன் த/பெ அருணாசலம் என்பவர் புதிய சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1. அரசாணை நிலை எண்: 255, ஊ.வ. மற்றும் ஊராட்சி துறை நாள்: 18.08.97
2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இயக்குநர் ஊரக வளர்ச்சித்துறை சென்னை-அவர்களின் நே.மு.க.எண்: 13219/07 D R P/P C A நாள் : 14.02.1997
3. A. இலட்சுமணன் த/பெ அருணாசலம் என்பவரது விண்ணப்ப நாள் : 06.09.2019

**உத்திரவு:**

சூளகிரி ஊராட்சி ஒன்றியம் பேரண்டப்பள்ளி ஊராட்சி 73, மோரணப்பள்ளி வருவாய் கிராம சர்வே எண்: 389/2D1A , 389/25 - ல் புதிய சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நீல வரைபட அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள் :**

1. அனுமதி அளிக்கப்பட்டுள்ள நீல வண்ண வரைபடத்தில் உள்ளவாறே சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தங்களின் நீல வண்ண வரைபடத்தின் அனுமதி ரத்து செய்யப்படும்.

2. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டும் போது கழிவு நீருக்கென தனியே ஊராட்சி வடிகால் வரை தனியாக வடிகால் கட்டி விடப்பட வேண்டும்.

3. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டும் போது சாதாரணமான முறையில் செப்டிக் டேங்க் வசதிகள் ஊராட்சியின் கழிவு நீர் வடிகாலுடன் நேரடியாக இணைக்கப்படக்கூடாது.

4. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டும் போர்து வாசற்படிகள், ஜன்னல்கள், வெண்டிலேட்டர்கள், பால்கனி ஆகியவைகள் சொந்த நிலத்தின் எல்லைக்கு உட்பட்டு இருக்கவேண்டும்.

5. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டும் போது ஊராட்சி அல்லது அரசு புறம்போக்கு நிலங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. அவ்வாறு ஏதாவது ஊராட்சி நிர்வாகத்திற்கு தெரியவரின் தங்களின் நீல வண்ண வரைபடத்தின் அனுமதி ரத்து செய்யப்படுவதுடன் தங்களின் மீது அரசு விதி முறைப்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் .

6. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டமைப்புக்கேற்ப மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் உரிமம் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

For GNG CONSTRUCTIONS
Partner

Scanned by CamScanner

7. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டும் போது சிறப்பு குடியிருப்பு கட்டிடத்தை சுற்றி பலன் தரும் மரங்க மற்றும் செடிகள் அதிக அளவில் வைக்கப்பட வேண்டும் .

8. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டும் போது கட்டிடத்தின் சமையல் அறையின் புகை சீராக வெளியே போ சரியான புகைக்கூண்டு அமைக்கப்பட வேண்டும்.

9. இந்த நீல வரைபட அனுமதி 17.09.2019 தேதியில் அனுமதிக்கப்பட்டு 16.09.2020 தேதி வரை அமுலில் இருக்கும்.

10. மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் ஊராட்சிக்கு வரி விதிப்பிற்கு கட்டாய விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.நீல வரைபட அனுமதி வழங்கப்பட்ட காலத்திற்குள் சிறப்பு குடியிருப் கட்டிடம் கட்டி முடிக்காவிட்டால் உரிமம் கால தாமதத்திற்காக உரிய உரிமக்கட்டணம் செலுத்தி இரண்டு ரூபாய் நீதி மன்ற முத்திரை ஒட்டிய மனு செய்து உரிமம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இக்கால கட்டத்தில் எவ்வித கட்டிட வேலையும் செய்யக்கூடாது.

11. சிறப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டுவதில் அரசு விதி மீறல்கள் இருப்பின் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி உரிமம் இரத்து செய்யப்படும்

இணைப்பு : மனுதாரருக்கான வரைபடம்

தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
பேரண்டப்பள்ளி ஊராட்சி
சூளகிரி ஊராட்சி ஒன்றியம்

17.9.19
17.9.19

பெறுநர்

திரு. A. இலட்சுமணன் த/பெ அருணாசலம்
#1/200-19 மாருதி கிரீன் பீல்ட்ஸ்,
கொசுவுகட்டா, ஒசூர்

For GNG CONSTRUCTIONS
Partner

Scanned by CamScanner

தமிழ்நாடு அரசு – நகர் ஊரமைப்பு துறை

உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர்: திரு.ப.யோகராஜா.பி,இ.

ந.க. எண். 125/2019/ஒபுநவகு நாள்: 19.07.2019

பொருள்: சிறப்பு குடியிருப்பு கட்டிடம் - ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் - சூளகிரி ஊராட்சி ஒன்றியம் - பேரண்டப்பள்ளி ஊராட்சி - மோரனப்பள்ளி கிராமம் - சர்வே எண்கள்: 389/2D1A, 389/25-ல் பரப்பு 1577.03 ச.மீ இடத்தில் ஸ்டில்ட் தளம் + முதல் தளம் + இரண்டாம் தளம் + மூன்றாம் தளம் + நான்காம் தளத்துடன் தலா 12 குடியிருப்புகள் வீதம், மொத்தம் 48 குடியிருப்புகள் கொண்ட சிறப்பு குடியிருப்பு கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர் திரு. A. லட்சுமணன் ஒசூர் விண்ணப்பம் நாள்: 28.01.2019 மற்றும் 23.02.2019.
2. உறுப்பினர் செயலர்(பொ) ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் கடிதம் எண்: 125/2019/ஒபுநவகு நாள்: 28.02.2019.
3. மனுதாரர் திரு. A. லட்சுமணன் ஒசூர் விண்ணப்பம் நாள்: 16.07.2019.
4. ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 112-வது குழும கூட்டம் தீர்மானம் எண்: 06 நாள்: 22.02.2019.

*****

<u>உத்தரவு:</u>

ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் சூளகிரி ஊராட்சி ஒன்றியம் - பேரண்டப்பள்ளி ஊராட்சி - மோரனப்பள்ளி கிராமம் - சர்வே எண்கள்: 389/2D1A, 389/25-ல் பரப்பு 1577.03 ச.மீ இடத்தில் ஸ்டில்ட் தளம் + முதல் தளம் + இரண்டாம் தளம் + மூன்றாம் தளம் + நான்காம் தளத்துடன் தலா 12 குடியிருப்புகள் வீதம் மொத்தம், 48 குடியிருப்புகள் கொண்ட சிறப்பு குடியிருப்பு கட்டுமான அமைவிடத்திற்கு 'ABCDEF' என எல்லையிட்டு ம.வ./ஒ.பு.ந.வ.கு எண்: **21/2019** என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

அம்மனையில் கீழ்க்கண்டவாறு உத்தேசங்கள் அமைகின்றன

| | | | | |
|---|---|---|---|---|
| மனையின் பரப்பு | -- | 1577.03 ச.மீ | | |
| ஸ்டில்ட் தளம் | -- | 786.08 ச.மீ | (வாகன நிறுத்துமிடம்) | |
| முதல் தளம் | -- | 773.44 ச.மீ | (12 குடியிருப்புகள்) | (48 குடியிருப்புகள்) |
| இரண்டாம் தளம் | -- | 773.44 ச.மீ | (12 குடியிருப்புகள்) | |
| மூன்றாம் தளம் | -- | 773.44 ச.மீ | (12 குடியிருப்புகள்) | |
| நான்காம் தளம் | -- | 773.44 ச.மீ | (12 குடியிருப்புகள்) | |
| மாடிப்படிகட்டு அறை | -- | 39.74 ச.மீ | | |

For GNG CONSTRUCTIONS
Partner

Scanned by CamScanner

பார்வை 4-ல் கண்டுள்ள ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தின் 112-வது குழும கூட்டம் தீர்மானம் எண்: 06 நாள்: 22.02.2019 தீர்மானத்தின்படி உறுப்பினர் செயலர் ஓசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி வழங்கும் பொருட்டு கட்டிட வரைபடங்களுக்கு திட்ட அனுமதி எண். **க.வ/ தி.அ /ஓபுநவகு/ எண்: 11A, 11B, 11C/2019** என எண்ணிடப்பட்டு 19.07.2019 முதல் 18.07.2024 வரை 5 வருடங்களுக்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

2. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

5. The provisions in the G.O.(Ms) No.17, Housing and Urban Development (UD4(3)) Department dated:05.02.2016 relating to installation and use of solar energy system should be followed:

6. The conditions given in the Fire Department NOC should be followed.

7. "This order is passed Subject to the out come of the Writs Petition WP(MD) No.8948 of 2019"

<u>நிபந்தனைகள்:</u>

1) உத்தேச பலமாடிக் குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

Scanned by CamScanner

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்:138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2002 -ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.

9) அரசாணை எண் : 341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.04-ன் படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவரும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சூளகிரி, அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவுக்காக வட்டார வளர்ச்சி அலுவலர், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சூளகிரி, அவர்களை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை அனுப்புமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சூளகிரி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

15/7/19

உறுப்பினர் செயலர் (பொ),
ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம்,
ஒசூர்.

15/7/19

பெறுநர் :

1) வட்டார வளர்ச்சி அலுவலர்
சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சூளகிரி
இணைப்பு - திட்ட அனுமதி வழங்கப்பட்ட
வரைபடங்கள் - 2 தொகுப்பு.

2) Mr. A. Lakshmanan,
S/o. Arunachalam,
No. 1/200 -19 Maruthi Green Fields
Kasavakatta
Hosur. } உத்தரவு கடிதம் மட்டும்

For GNB CONSTRUCTIONS
Partner

Partner

Scanned by CamScanner